06.08.2024

O.S.No.190/2019

வா.சா.1.திரு.மோசஸ் தயான்.  த.பெ.சாலமன்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு  விசாரணை

1. நான் தாவா சொத்தினை ரவிச்சந்திரன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அவர் ஆறுமுகம் ஆசாரி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான், மேற்படி ஆறுமுகம் ஆசாரி, அய்யனார் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றிருந்தார். எனது கிரைய ஆவணம், ரவிச்சந்திரன் கிரைய ஆவணம் மற்றும் ஆறுமுகம் ஆசாரி ஆகியவற்றின் அசலை இந்த வழக்கில்தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து இஎம்ஜி சௌந்திராஜனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, அவரிடம் இருந்து அய்யனார் கிரையம் பெற்றுள்ளார். இஎம்ஜி சௌந்திராஜன் தத்துபுத்திரனா என்று எனக்குதெரியாது என்றால் சரிதான், அதுதொடர்பான ஆவணங்களை நான் பார்த்தில்லை என்றால் சரிதான். தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள் 169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகும். தாவாசொத்து கண்ணனேந்தல் ஊராட்சிக்கு உட்பட்டது.

2. தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்று தெரியாமல்இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  அய்யனார், இஎம்ஜி சௌந்திராஜன எனப்வரிடம் இருந்து  20.04.1996ல் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் கேளரா மாநிலம் பாறசாலையில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மதுரையில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் மதுரையில் பதிவு செய்யப்பட்டது என்றாலும், இஎம்ஜி சௌந்திராஜன் கையொப்பதினை மோசடியாக உற்பத்தி செய்து அய்யனார் அவர்களால் மதுரையில் சார்பதிவாளர் அலுவலகம் இருக்கும் போது  கேளரா மாநிலம் பாறசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. அதே போல் அய்யானருக்கு இஎம்ஜி சௌந்திராஜன் 11.09.1997 ல் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் இஎம்ஜி சௌந்திராஜன் என்பவரது கையொப்பதினை அய்யனார் என்பவர் மோசடியாக உற்பத்தி செய்து தாவா சர்வே எண்களில் கட்டுப்பட்ட சொத்துக்களை அபகரிக்கும் நோக்கில் போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

20.04.1996ம் தேதிய கிரைய ஆவணம் மற்றும் 11.09.1997ம் தேதிய பொதுஅதிகார ஆவணம் ஆகிய ஆவணங்களில் உள்ள கையொப்பம் இளம்ஜி சௌந்திராஜன் கையொப்பம் அல்ல என்றாலும, அவ்வாறு அந்த ஆவணங்களை அவர் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும சரியல்ல. மேற்சொன்ன பொது அதிகார ஆவணம் கிரைய ஆவணம் ஆகியவற்றின் அசல் ஆவணங்களை பார்த்தில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தினை அளந்துஅத்துமால் பார்த்து கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது முன் பாத்தியஸ்தார்கள் ரவிச்சந்திரன், ஆறுமுகம் ஆசாரி ஆகியோர்களும் தாவாசொத்தினை அளந்து அத்துமால் பார்த்து கியைரம் வாங்கினார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். Trust O.P.35/67 என்ற உத்தரவின அடிப்படையில் நீதிமன்ற அனுமதி பெற்று தாவா சொத்தினை இளம் கோபாலகிருஷ்ண பள்ளியின் சார்பாக பள்ளி கல்வி துறைக்கு கொடுக்கப்பட்டதாக நான் நிருபண வாக்குமூலம் சொல்லி உள்ளேன் என்றால் சரதிான். அந்த ஆவணத்தினை நான் நேரடியாக பார்த்தில்லை என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அய்யனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் மற்றும் அவர் பெற்றதாகசொல்லப்படும் பொது அதிகார ஆவணம் மோசடியானவை எனவும் இளம்ஜி சௌந்திராஜன் கையொப்பதினை மோசடியாக இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் எனவும்பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்துள்ள நிலையில் அதன் உண்மை தன்மையை நிருபிக்கும் வகையில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்து ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை பிரதிவாதிகள் பள்ளிக்கு பாத்தியப்பட்ட விளையாட்டு மைதானமாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது பெயரிலோ, எனது முன் பாத்தியஸ்தரான ரவிச்சந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆசாரி ஆகியோர்கள் பெயரிலோ தாவா சொத்து குறித்து வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது கிரைய பத்திரம் மற்றும் ரவிச்சந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆசாரி ஆகியோரது கிரைய பத்திரம் ஆகியவை பெயரளவில் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் தற்போது வரை நடைமுறைக்கு வரவில்லை

என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாத காரணத்தினால்தான் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-6 மற்றும் வா.சா.ஆ-23 ஆவணம் எனது கிரைய ஆவணத்துடன் இணைந்து தாக்கல் செய்யப்பட்ட ஆவணமாக இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தித்றகும் வா.சா.ஆ-6 மற்றும்வா.சா.ஆ-23 ஆவணத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும், அவை இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சரியல்ல.

6. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் அறக்கட்டளைக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் மேற்படி அறக்கட்டளையை இந்த வழக்கில் சேர்க்காததாலும், அதேபோல் பள்ளி கல்விதுறையை தரப்பினராக சேர்க்காததாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்டில் வங்கி மூலமாக ரூபாய்.50000 வைப்பீடு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தொடர்பான அசல் வழக்கு எண்.75/11, 676/2009, 594/2009, 675/09, 671/09 வழக்குகள் தாக்கல் செய்திருந்ததாக நான் பிராதில் சொல்லி உள்ளதால் அந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழககுகளில் தாவாசொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்கள்.169/1 மற்றும் 169/2 ஆகியவை குறிப்பிடபடவில்லை என்பதற்காக தாவா சொத்தில் நான் உரிமை கொண்டாட இயலாது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து சம்பந்தமாக எனக்கு உரிமையே இல்லை என பிரதிவாதிகள் தரப்பில் எதிரவாதம் செய்து வரும் நிலையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆசாரி எங்குள்ளார் என்றால் ரவிச்சந்திரன் மதுரையில் உள்ளார். ஆறுமுகம் ஆசாரி எங்குள்ளார் என்று எனக்கு தெரியாது. ரவிச்சந்திரன் மற்றும் ஆறுமுகம் ஆசாரி என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் இந்த வழககு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கோபாலகிருஷ்ண கோன் டிரஸ்ரையும் பள்ளிகல்வி துறையினைரையும் தரப்பினராக

சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துளளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

8. தாவாசொத்தின் மதிப்பு செண்டு 1-க்கு சுமார் 3 லட்சம் முதல் 5 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு சுமார் செண்டு 1-க்கு சுமார் 5 லட்சம் வரை உள்ளது என்ற விவரத்தினை நான் தெரிந்துகொண்டே தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை நான் முறையாக மதிப்பிடு செய்து நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்பதற்காக இந்த வழககு தள்ளுபடிசெய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், எனது கிரைய பத்திரம் ஆவணமாகதான் உள்ளதே தவிர நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் தற்போது வரை தாவா சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகீறது என்றாலும், தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் நகல் என்பதால் அதை சாட்சியமாக அனுமதிக்க முடியாது ஆவணங்கள் என்பதால் அதன் அடிப்படையில் எனது வழக்கிற்கு எந்த அனுகூலமும் ஏற்படாது என்றாலும், அந்த ஆணவத்தினை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.